பக்கங்கள் - 16
விலை - ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 162

வியாழக்கிழமை
08 மே 2025

சித்திரை 25ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056




உள்ளூராட்சித்
தேர்தல் 2025

தேர்தல்
முடிவுகள்
உள்ளே...

உள்ளூராட்சித் தேர்தலில்

# அதிக சபைகளை வென்றும் அரசுக்கு வாக்கில் வீழ்ச்சி!

## 6 மாதங்களில் 18.3 வீத ஆதரவை இழந்தது

கொழும்பு, மே 8

உள்ளூராட்சித் தேர்தலில், ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பெரும்பாலான சபைகளை கைப்பற்றியிருந்தாலும், கடந்த பொதுத்தேர்தலுடன் ஒப்பிடுகையில் அந்தக் கட்சிக்குரிய வாக்குவங்கி சரிவடைந்துள்ளது. இதன்படி 18.3 வீதமான வாக்குகளை வெறும் ஆறு மாதங்களுக்குள் தேசிய மக்கள் சக்தி இழந்துள்ளது.

15



## பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல்

### வெடித்தது நேரடி மோதல்

விரிவு பக்கம் - 12

காணாமலாக்கப்பட்ட உறவுகளைத்தேடி

## 3,000 நாள்களை கடந்தது போர்!

விரிவு பக்கம் - 06

## மின்னல் தாக்கி விவசாயி சாவு!

### முல்லைத்தீவில் சோகம்

முல்லைத்தீவு, மே 8

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு கிழக்கு கமக்கார அமைப்பின் கீழுள்ள கள்ளியடி வயலில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயியொருவர் மின்னல் தாக்கியதில் நேற்று உயிரிழந்

15

## நிரந்தர அரசியற்தீர்வுக்கான ஆணை தரப்பட்டிருக்கின்றது

### வடக்கு - கிழக்குத் தொடர்பில் சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 8

நிரந்தரமான அரசியற்தீர்வென்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. அதற்காகவே, இந்தத் தேர்தல் மூலம் மக்கள் ஆணையைத் தந்திருக்

15

உலக வங்கியால்

## ஒரு பில்லியன் டொலர் நிதியுதவி இலங்கைக்கு



கொழும்பு, மே 8

இலங்கையில் வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் தனியார்துறை வளர்ச்சிக்காக ஒரு பில்லியனுக்கும் அதிகமான நிதியுதவியை வழங்குவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.
உலக வங்கி

15

## ஈழத் தமிழர்களின் உரிமையை விரைந்து உறுதிப்படுத்துங்கள்!

### தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் பழ.நெடுமாறன் கோரிக்கை

சென்னை, மே 8

தமிழக அகதி முகாம்களில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவரும் ஈழத் தமிழ் அகதிகளின் உரிமைகளை விரைந்து உறுதிப்படுத்த வேண்டும்

15

அதிகாரத்தைக் கைப்பற்ற

## எந்த எல்லைக்கும் ஜே.வி.பி. செல்லும்

### ரஞ்சித் மத்தும பண்டார காட்டம்



கொழும்பு, மே 8

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், தக்கவைப்பதற்கும் எந்த எல்லைக்கும் ஜே.வி.பி.யினர் செல்வார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

15

## எட்டு சித்த வைத்தியர்கள் வைத்திய நிபுணர்களாகினர்

யாழ்ப்பாணம், மே 8

எட்டு சித்த வைத்தியர்கள் ஆயுள்வேதத் திணைக்களத்தால் பட்ட மேற்படிப்பை நிறைவுசெய்து, வைத்திய நிபுணர்கள் என்ற விசேட தரத்துக்கு உயர்த்தப்பட்

15




'ரண்டு எலக்சனோட அடிச்ச அலையெல்லாம் அடங்கிப் போட்டுது போல'

## மர்மக் காய்ச்சலால் இளைஞர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், மே 8

நீண்டநாள் காய்ச்சல் காரணமாக இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை புலோலி தெற்குப் பகுதியைச் சேர்ந்த பரந்தாமன் லக்சன் (வயது-21) என்ற

15

## மர அரிவு இயந்திரத்தில் சிக்கி குடும்பத்தலைவர் துயரச் சாவு

யாழ்ப்பாணம், மே 8

ஏழாலையில் உள்ள வீடொன்றுக்குள் அமைக்கப்பட்டுள்ள மர அரிவு இயந்திரத்தில் சிக்கி குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பாலசிங்கம் ஜெகாஸ் (வயது-42) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். வழமைபோல நேற்றையதினம் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, இயந்திரத்துக்குள் நெஞ்சு

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 07.05.2025 | 4066 | Y | 07 21 26 73 | விசேட எழுத்து Y |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 07.05.2025 | 1133 | | 13 16 24 37 | வெற்றி இலக்கினம் தனுசு |
| NLB ஜய | 07.05.2025 | 0092 | H | 6 9 7 7 | |
| மெகா பவர் | 07.05.2025 | 2172 | U | 34 44 73 75 | சுப்பர் இலக்கம் 15 |
| மஹஜன சம்பத | 07.05.2025 | 5824 | R | 1 8 9 0 4 7 | |
| தன நிதானய | 07.05.2025 | 1854 | G | 48 59 60 78 | விசேட எழுத்து G |
| அத சம்பத | 07.05.2025 | 0399 | R | 9 0 4 7 | |

# ஐ.தே.க.வின் கோட்டை தகர்ப்பு

# கொழும்பு மாநகரசபையை கைப்பற்றப்போவது யார்?

கொழும்பு, மே 8

**பல தசாப்தங்களாக தனது ஆட்சி அதிகாரத்தின்கீழ் இருந்த மிக முக்கியமான உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்றான கொழும்பு மாநகரசபையை இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி இழந்துள்ளது. குறித்த சபைக்குக் கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்தாலும் ஆட்சி அமைப்பதற்குரிய அறுதிப்பெரும்பான்மை பலம் தேசிய மக்கள் சக்திக்கும் கிடைக்கப்பெறவில்லை.**



கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் 81 ஆயிரத்து 814 வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு 48 இடங்கள் கிடைத்துள்ளன. 58 ஆயிரத்து 375 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 29 உறுப்பினர்களும், 26 ஆயிரத்து 297 வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 13 உறுப்பினர்களும்சபைக்குதெரிவாகியுள்ளனர்.

அத்துடன், கொழும்பு மாநகரசபையில் 9 ஆயிரத்து 341 வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிக்கு 5 இடங்களும், 8 ஆயிரத்து 60 வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் காங்கிரசுக்கு 4 இடங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஏனைய கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களுக்களில் இருந்து 18 உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். 117 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப்பெரும்பான்மையைப் பெறுவதற்கு 59 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அந்த வகையில் தேசிய மக்கள் சக்திக்கு இன்னும் 11 உறுப்பினர்களின்ஆதரவுதேவைப்படுகின்றது.

மறுபுறத்தில் எதிரணி மற்றும் சுயேச்சைக்குழுக்கள் வசம் 69 இடங்கள் உள்ளன. எதிரணிகளை ஒன்றிணைத்து கொழும்பு மாநகரசபையில் ஆட்சி நிலைநாட்டப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியைவிட எதிர்க்கட்சிகளுக்கு அதிகமான ஆசனங்கள் இருப்பதால் எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சியை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் ஆளுங்கட்சியால் கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-44)

**சுபிரி தன சம்பத** — திகதி 07.05.2025, தினம் புதன்கிழமை, வெற்றி வாரம் 0532, ஆங்கில எழுத்து G, வெற்றி இலக்கம் 8 2 7 2 8 2

**Super Ball** — திகதி 07.05.2025, தினம் புதன்கிழமை, சீட்டிழுப்பு வாரம் 2798, ஆங்கில எழுத்து V, வெற்றி இலக்கம் 01 02 59 61

**சனிதா** — திகதி 07.05.2025, தினம் புதன்கிழமை, ஆங்கில எழுத்து V, வெற்றி இலக்கம் 07 17 34 40, வெற்றி வாரம் 4959

**லக்ன ராசி** — திகதி 07.05.2025, தினம் புதன்கிழமை, மீனம், வெற்றி இலக்கம் 23 29 38 61, சீட்டிழுப்பு வாரம் 4510

**KAPRUKA** — திகதி 07.05.2025, தினம் புதன்கிழமை, ஆங்கில எழுத்து Y, சுப்பர் இலக்கம் 40, வெற்றி இலக்கம் 08 33 54 65, வெற்றி வாரம் 1974

**அத கோடிபதி** — திகதி 07.05.2025, தினம் புதன்கிழமை, ஆங்கில எழுத்து I, வெற்றி இலக்கம் 10 44 48 69, வெற்றி வாரம் 2624

**JAYODA** — திகதி 07.05.2025, தினம் புதன்கிழமை, ஆங்கில எழுத்து T, வெற்றி இலக்கம் 19 57 61 68, வெற்றி வாரம் 2125

## திசைகாட்டிக்கு 3,926 ஆசனங்கள்

கொழும்பு, மே 8

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் தேசிய மக்கள் சக்தி 45 இலட்சத்து 3 ஆயிரத்து 930 வாக்குகளைப் பெற்றுள்ள நிலையில் மொத்தமாக 3 ஆயிரத்து 926 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி 22 இலட்சத்து 58 ஆயிரத்து 480 வாக்குகளைப் பெற்று ஆயிரத்து 767 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 9 இலட்சத்து 54 ஆயிரத்து 517 வாக்குகளைப் பெற்று 742 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. ஐக்கிய தேசியக்கட்சி 4 இலட்சத்து 88 ஆயிரத்து 406 வாக்குகளைப் பெற்று 381 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. இலங்கைத் தமிழரசுக்கட்சி 3 இலட்சத்து 7 ஆயிரத்து 657 வாக்குகளைப் பெற்று 377 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கின்றது. (எ-இ)

# சவாலான பொறுப்பை நிறைவேற்றத் தயார்!

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு



கொழும்பு, மே 8

எதிர்க்கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என்ற ஆணையையே மக்கள் வழங்கியுள்ளனர். எனவே, அந்தச் சவால் மிக்க பணியை நிறைவேற்றுவதற்குரிய தலைமைத்துவத்தை வழங்குவதற்குத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவமானங்கள், அச்சுறுத்தல்கள், சேறுபூசும் வார்த்தைகள், சதித்திட்டங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து ஆதரித்த மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அண்மையில் நடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களில் இருபெரும் மக்கள் ஆணைகளைப் பெற்ற இந்த அரசாங்கம், 6 மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் மிகப் பெரிய சரிவைச் சந்தித்துள்ளது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்படவேண்டும் என்ற செய்தியை நாட்டு மக்கள் இத்தேர்தலின் ஊடாக முன்வைத்துள்ள னர். நாட்டு மக்கள் இப்போது பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். உண்மையான மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கான தமது அங்கீகரித்தை வழங்கியுள்ளனர். பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பொய்களை முறியடித்து, உண்மையான பலம் வாய்ந்த மக்கள் சேவைக்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்புகளும் ஒன்றிணையவேண்டும் என்ற பொதுமக்களின் கருத்தின் அடிப்படையில் இந்த சவாலான பொறுப்புக்கு தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. அதன் ஊடாக வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும், கொள்கை ரீதியானது மான சிறந்த மக்கள் சேவையைப் பெற்றுத் தருவோம் - என்றார். (ச-44-சீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கால்பதிப்பு வரலாற்று வெற்றி!

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு



**கொழும்பு, மே 8**
**வடக்கு, கிழக்கு தமிழ்மக்கள் தேசிய மக்கள் சக்தியை நிராகரித்துவிட்டனர் என முன்வைக் கப்பட்டுவரும் விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளமுடியாது. வடக்கு மாகாணத்தில் 150 வரையான உள்ளூராட்சி உறுப்பினர்களைப் பெறமுடிந்தமை வரலாற்று வெற்றியாகும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.**

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பின்போது வடக்கு, கிழக்கு நிலைவரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக் குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கில் எந்தவொரு கட்சிக்கும் தனித்து ஆட் சியமைப்பதற்குரிய ஆணை கிடைக்கப்பெற வில்லை. தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு மாகா ணத்தில் 150 வரையான உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.

வடக்கில் இதற்கு முன்னர் எமக்கு வவுனியா வைத் தவிர ஏனைய இடங்களில் உறுப்பினர் கள் இருக்கவில்லை. தற்போது கிடைக்கப்பெற் றுள்ள வெற்றிவரலாற்று முக்கியத்துவம்மிக்கது. வடக்கு, கிழக்கு மக்களுடன் ஏற்படுத்தப்பட்ட திட்டம் மேலும் பலப்படுத்தப்படும். வடக்கிலும், கிழக்கிலும் சில சபைகளில் எம்மால் ஆட்சி அமைக்கமுடியும்.

வடக்கில் ஏனைய கட்சிகள் இணைந்து ஆட்சி அமைக்க முற்பட்டாலும் அதனை நாம் குழப்ப மாட்டோம். சில கட்சிகள் எம்முடன் இணைந்து பயணிக்க முன்வந்துள்ளன- என்றார். (ச-44)


# பிரசன்ன ரணவீர நீதிமன்றில் சரண்

கொழும்பு, மே 8
முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர மஹர நீதி வான் நீதிமன்றில் நேற்றுப் புதன்கிழமை சரண டைந்துள்ளார்.

அவரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது

2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடைப் பிரதேசத்திலுள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர் பில் பிரசன்ன ரணவீரவைக் கைதுசெய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பிரசன்ன ரணவீர பிரதேசத்தைவிட்டுத் தப்பிச்சென்று நீண்டகாலமாகத் தலைமறைவாகி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# சதுரங்கம் ஆடும் சஜித்

கொழும்பு, மே 8
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது முகநூலில் சதுரங்கம் விளையாடும் படத்தை பதிவிட்டுள்ளார்.

இதன்மூலம் உள்ளூராட்சிசபைக ளில் ஆட்சியமைப்பதற்கு எதிர் காலத்தில் பேச்சுகள் அல்லது உடன் பாடுகள் அவசியம் என்பதை அவர் கோடிட்டுக்காட்டியுள்ளார்.

பல உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி யமைப்பதற்கு ஏனைய கட்சிகளு டன் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு ஐக் கிய மக்கள் சக்தி தயார் என்பதை இது வெளிப்படுத்துகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தேர்தல் பணியாளருக்கு இன்று விடுமுறை

கொழும்பு, மே 8
தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள சில அரச ஊழியர்களுக்கு இன்று கடமை விடுமுறை வழங் குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சுற்றறிக்கையொன்றை வெளி யிட்டு தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி நடைபெற்ற உள்ளூ ராட்சிமன்றத் தேர்தலின்போது வாக்கெண்ணும், தேர்தல் முடி வுகளை அட்டவணைப்படுத் தும், குறித்த பணிகளில் உத விச்சேவைகளை வழங்கும் கடமைகளில் ஈடுபட்டு அதற் கான வரவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்கும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் இன்று விடு முறை வழங்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (ச-இ)



# போலிப் பொலிஸார்; மக்கள் அவதானம்

கொழும்பு, மே 8
பொலிஸ் அதிகாரிகள் எனக் கூறி பல்வேறு பிரதேசங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்க ளிடமிருந்து பெறுமதியான பொருள்களை அபகரிக்கும் கும்பல் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான கும்பல் தொடர்பில் தகவல் கிடைத்தால் உட னடியாக பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறு பொலி ஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-இ)




**கைக்குவர முன்னே நெய்க்கு விலைபேசினால் தலைகுனிய வேண்டியும் வரலாம். முந்தநாள் எலக்சன் ரிசல்ட் வந்தவுடனயும் சிலர் இப்பிடி அவசரப்பட்டு வெடி கொளுத்தி பிறகு முகத்தில கரி பூசினமாதிரி நிண்டவை. உள்ளூராட்சி எலக்சன் முறையை மாதிரி ஒரு விநோதமான தெரிவு முறை எந்தநாட்டிலையும் இருக்காது. வாழ்க்கை ஒரு வட்டம் எண்டமாதிரி, இந்த உள்ளூராட்சி எலக்சனில வட்டாரத்தில வெண்ட கட்சி சபையில ஆட்சியைப் பிடிக்கேலாம இருக்கிறதையும், வட் டாரங்களில தோத்த கட்சி சபையில கெத்துக் காட்டுறதையும் கண்ணுக்கு முன்னால பார்க்க வேண்டியிருக்குது.**

**அப்பிடித்தான் இந்தமுறை சில கட்சியள் சில சபைகளில கூட வட்டாரங்களை வெண்டதால அந்தச் சபையளின்ர ஆட்சி எப்பிடியும் தங்களுக் குத்தான் எண்ட புளுகத்தில றோட்டு முழுக்க வெடி கொளுத்தி, வெற்றியைக் கொண்டாடி னவை. ஆனால் நடுச்சாமம் கழியத்தான் எந் தெந்த சபைக்கு, ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு 'போனஸ் சீற்' எண்ட விவரம் வந்தது. அதுக்குப் பிறகு எல்லாமே தலைகீழாப் போட்டுது. அவசரப்பட்டு வெடிகொளுத்தினவையின்ர பாடுதான் திண்டாட்டமாப் போட்டுது. ஒரு பக்கம் ஆட்சி அமைக்க ஏலாதே எண்ட ஏக்கம், இன் னொரு பக்கம் கிடைக்காத வெற்றிக்காக இப்பிடி ஆயிரக்கணக்கில செலவழிச்சு வெடிகொளுத்தி, காசைக் கரியாக்கிப் போட்டமே எண்ட கவலை. ஆக்கப் பொறுத்தவை ஆறவும் பொறுத்திருந்தால் இப்பிடி அவமானப்படவேண்டி வந்திருக்காதே.**

**இப்பிடி போனஸ் சீற் பங்கீடு, சபையளின்ர நிலை மையைத் தலைகீழா மாத்தினதால பெரிய கட்சியள் எல்லாம் சின்னக்கட்சியளோடையும், சுயேச்சையளையோடையும் டீல் பேசி, எப்பிடி யாவது ஆட்சியைப் பிடிச்சுப்போடவேணு மெண்டு ஆலாய்ப் பறக்கினமாம். திண்ணையில இருந்தவனுக்கு திடுக்கெண்டு கலியாணமான கதைமாதிரி, ஏதோ அரும்பொட்டில ஒண்டிரண்டு சீற்றுகள் எடுத்தவைக்கு கடும் டிமாண்ட் வந்திட் டுது. அவையும் இதைவிட்டால் சான்ஸ் கிடைக் காதுஎண்டுஉபதவிசாளர்பதவிதுங்களுக்குத்தான் தரவேணுமெண்டு பேரம் பேசுகினம். எதைத் திண்டாலாவது பித்தம் தெளிஞ்சால் சரி எண்டு நினைக்கிற பெரிய கட்சியள், 'நீங்கள் கேட்ட பதவி தரலாம்' எண்டு அவை சொல்லுறதுக்கெல் லாம் தலையாட்டுகினமாம். ஒரு எலக்சனோட உந்தக் கட்சியள் எல்லாம் எப்பிடி மாறிட்டினம் எண்டு பாக்க சனத்துக்குத்தான் கடும் சிரிப்பாக் கிடக்கு கண்டியளோ.**

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நேற்றைப் போலவே இன்றைக்கும் புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள். அதிகரிக்கும் பணிச்சுமையின் காரண மாக உடல் அசதி உண்டாகும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் மனஅமைதி பெறலாம்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும். சூரியபகவானை வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயல்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்கு மேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவை களுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதல் தரும்.

**கும்பம்:** முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

### கட்டாய நெருக்கடியில் களமிறங்கிய

# கொல்கத்தாவை நேற்று தோற்கடித்தது சென்னை

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவைத் தோற்கடித்து, அந்த அணியின் பிளேஓவ் கனவைக் கலைத்தது சென்னை.**




நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அந்த அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரகானே 48 ஓட்டங்களையும், ரசல் 38 ஓட்டங்களையும், மனீஸ் பாண்டே 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நூர் அஹமட் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்ப வீரர்களான மாத்ரே மற்றும் கொன்வே இருவரும் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். சென்னை அணியில் அறிமுக வீரராகக் களமிறங்கிய உர்வில் பட்டேல் 11 பந்துகளில் 31 ஓட்டங்களை விளாசினார். ஜடேஜா 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், பிரேவிஸ் மற்றும் டுபே இணைந்து இணைப்பாட்டத்தை அமைத்தனர். ஒரே ஓவரில் 30 ஓட்டங்களை விளாசி சென்னையின் அழுத்தத்தை போக்கினார் பிரேவிஸ் அவர் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நிதானமாக விளையாடிய டுபேயும், டோனியும் அணியை வெற்றிபெற வைத்தனர்.

**கொல்கத்தா வெளியேற்றம்**

இந்த ஆட்டத்துக்கு முன்னர் கொல்கத்தா அணி 11 ஆட்டங்களில் விளையாடி 11 புள்ளிகளைப் பெற்றிருந்தது. இதனால், வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாய நிலையில் அந்த அணி களமிறங்கியது. சென்னையின் வெற்றியைத் தொடர்ந்து கொல்கத்தா அணியின் பிளேஓவ் கனவு கலைக்கப்பட்டுள்ளது. (ம)

### 25 வீதமான

# பெண் பிரதிநிதித்துவத்தை கட்டாயம் உறுதிசெய்க!

### சிவில் அமைப்புகள் வலியுறுத்து

கொழும்பு, மே 8

உள்ளூராட்சித் தேர்தலில் 25 வீதமான பெண் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு முன்வருமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கு 34 பெண்கள் மற்றும் சிவில் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புகள் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சி மன்றங்களில் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டிய சட்டரீதியான கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. எனவே ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் இளம் பெண்கள் உள்ளடங்கலாக 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதனை தேர்தல்கள் ஆணைக்குழு இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதிலிருந்து தவறும் அரசியல் கட்சிகள் பொறுப்புக்கூறச் செய்யப்பட வேண்டும்.

இம்முறை தேர்தலில் வாக்களித்தோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், பிரசாரம், வாக்களிப்பு, தேர்தலில் போட்டியிடல், போனஸ் ஆசனத்தில் பதிவுசெய்யப்படல் என தேர்தல் செயன்முறையின் சகல கூறுகளிலும் பெண்கள் உத்வேகத்துடன் பங்கேற்றமையைக் காணமுடிந்தது. இதற்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம்வகித்த அனுபவத்தைக்கொண்ட பெண்கள் பலர் இம்முறை கட்சிகளின் ஊடாகவோ, சுயேச்சையாகவோ போட்டியிட்டனர்.

அதேவேளை இந்தத் தேர்தலில் அநேகமான பெண்கள் அதிகளவு வாக்குகளைப் பெற்றிருப்பதையும், மீண்டும் உள்ளூராட்சிமன்ற அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்பதையும் அவதானிக்க முடிகிறது - என்றுள்ளது.

(ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

சரியானதைச் செய்யுங்கள். அது சிலரை மகிழ்விக்கும், மற்றவர்களை ஆச்சரியப்படுத்தும்.

– மார்க் ட்வைன்–


# மாய அலை ஓய்ந்தது

கடந்த ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்களில் அடித்த அநுர அலை, தெற்கில் உள்ளூராட்சித் தேர்தலிலும் உணரப்பட்டிருக்கின்றது. தெற்கில் பெரும்பாலான இடங்களில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி முன்னிலை பெற்றிருக்கின்றது. ஆனால் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் கடந்த தேர்தல்களில் அடித்த மாற்றம் என்ற மாய அலை அடங்கிப் போயிருக்கின்றது. மீண்டும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவு கிடைத்திருக்கின்றது.

நடந்துமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியத்தை கொள்கையாகக் கொண்ட கட்சிகள் முன்னிலை பெற்றிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகள் உட்கட்சிப் பூசல்களாலும், கட்சிகள் ரீதியாகவும் பிளவுபட்டுள்ளபோதும், தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் மீதுள்ள பற்றுறுதியால் வழங்கிய ஒரு சந்தர்ப்பம் என்றே உள்ளூராட்சித் தேர்தல் முடிவை எடுத்துக்கொள்ள இயலும். தமிழ்த் தேசியக் கட்சிகள் கடந்தகாலங்களில் விட்ட தவறுகளைத் திருத்திக்கொள்ள மக்கள் வழங்கியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரே கொள்கையை முன்னிறுத்திப் பல துண்டங்களாகச் சிதறிக்கிடக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் இனியாவது ஓரணியில் திரண்டு தமிழ் மக்களுக்கான அரசியல் பயணத்தை முன்னெடுப்பது அவசியம். அதேவேளை கொள்கைகளுக்கு எதிரான கட்சிகளோடும், தரப்புகளோடும் இணைவதும் பாதகமே. இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஏனைய தமிழ்க் கட்சிகள் தங்களின் வறட்டுப் பிடிவாதங்களைக் கைவிட்டு, தமிழ் இனத்தின் நலன் சார்ந்த அரசியல் பயணத்தை விரைவாக ஆரம்பிக்கவேண்டும். 'பொது எதிரி' என்ற எண்ணப்பாட்டின் காரணமாக இப்போது கிடைத்திருக்கும் வெற்றி நிரந்தரமானது என்று கருதி இறுமாப்புக் கொண்டிருக்காது, உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் ஊடாகத் தமிழ் மக்கள் உணர்த்தியுள்ள செய்தியைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும் -புரிந்துகொண்டு எதிர்காலச் செயற்பாடுகளைக் கட்டமைக்கவேண்டும்.

மறுபுறத்தில்-

கடந்த ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்காத ஆதரவை வடக்கில் பெற்றிருந்தது. வடக்கில் இருந்து கிடைத்த வாக்குகள் தங்களின் கொள்கைக்குக் கிடைத்த வாக்குகள் என்று உருவகித்துக்கொண்ட தேசிய மக்கள் சக்தி, தேர்தல் வெற்றிகளுக்குப் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை - எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் அசமந்தப் போக்கைக் கையாண்டது. இனப்பிரச்சினைக்கான தீர்வு, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு, திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அடாத்தான காணிச் சுவீகரிப்பு போன்ற முக்கியமான விடயங்களைக் கையாள்வதைப் பின்தள்ளி வந்தது. ஆனால் கடந்த இரு தேர்தல்களிலும் வடக்கில் இருந்து கிடைத்த ஆதரவு, புரையோடிப்போயிருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தரப்பட்ட வாய்ப்பே தவிர, தமிழ் மக்கள் எப்போதும் கொள்கையில் இருந்து விலகிப்போகவில்லை என்ற செய்தியே உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள், அனைவருக்கும் சந்தர்ப்பங்களை வழங்கியிருக்கின்றார்கள். அந்தச் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால் மக்களின் ஆதரவு எப்போதும் தொடரும். அந்த நிதர்சனத்தை உணர்ந்து - சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால் மட்டுமே நிலைபெறமுடியும். ஆனால் வழக்கம் போன்று தேர்தல் வெற்றியின் பின்னர் மக்களை மறந்து தலைக்கனம் ஏறி ஆடினால், அடுத்துவரும் தேர்தல்களில் மக்கள் மீண்டும் தலையில் கொட்டி -மூளையில் உறைக்கும் வகையில் உணர்த்துவார்கள் என்பதை அரசியல் கட்சிகள் புரிந்துகொண்டால் சரி.




# மாகாணசபைத் தேர்தலை நடத்திக் காட்டுங்கள்



## எதிர்க்கட்சி சவால்

**கொழும்பு, மே 8**
**முடிந்தால் மாகாணசபைத் தேர்தலையும் விரைவில் நடத்துமாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சவால் விடுத்துள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இந்தச் சவால் விடுக்கப்பட்டுள்ளது.
அரசாங்கத்தின் வாக்கு வங்கி சரிந்துள்ளது. எனவே, மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சக்கூடும். முடியுமானால் அத்தேர்தலையும் விரைவில் நடத்துமாறு சவால் விடுக்கின்றோம்.
ஐந்து மாத காலப்பகுதிக்குள் சரிந்துவிட்ட அரசாங்கத்தின் வாக்கு வங்கியை மாகாணத் தேர்தலில் மேலும் வீழ்த்துவோம். அரசியலில் எதிர்பாராத சம்பவங்கள் நடக்கக்கூடும். அரசாங்கத்தின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பித்துவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)

# "இது வெறும் ஆரம்பமே" நாமல் பதிவு

கொழும்பு, மே 8
இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
எக்ஸ் தளப் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த ஆறு மாதங்களில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் ஒன்றிணைந்து, எங்கள் கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பதன் மூலம் உத்வேகம் பெற்றுள்ளது. சிலர் பொய்யான வாக்குறுதிகளை நம்பியிருந்தாலும், மக்களை முதன்மைப்படுத்தும் நேர்மையான, கொள்கை ரீதியான அரசியலுக்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ரூபா சரிவு

கொழும்பு, மே 8
இலங்கை ரூபா நேற்று அமெரிக்க டொலருக்கு எதிராக சரிவு நிலையைப் பதிவுசெய்துள்ளது.
இலங்கை மத்திய வங்கியின் தகவல்களின் படி, அமெரிக்க டொலரின் கொள்முதல் விலை ரூ. 295.18 இலிருந்து ரூ. 295.30 ஆக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் விற்பனை விலை ரூ. 303.67 இலிருந்து ரூ. 303.66 ஆக குறைந்துள்ளது.
அதேவேளை இலங்கை ரூபாவின் மதிப்பு வளைகுடா நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக அதிகரித்துள்ளது. (ச-இ)

# மாணவர்கள் மோதல்; அறுவர் கைது

கொழும்பு, மே 8
சக மாணவர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தாக்குதலுக்கு உள்ளான மாணவர் பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அதே வருட மற்றும் நான்காம் வருட மாணவர்கள் குழுவால் மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, மே 8
மேல், சப்ரகமுவ, மத்திய, ஊவா, தென் மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் பொலநறுவை மாவட்டத்துக்கும் சிவப்பு மின்னல் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் 75 மில்லிமீற்றரிலும் அதிகரித்த மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



நாளை
வெள்ளிக்கிழமை- சித்திரை 26
09.05.2025
சுபநேரம் : 05.54- 07.24
ராகுகாலம் : 10.24 - 11.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடந்தன 3000 நாள்கள்; உறவுகளைத் தேடிப் போராட்டம்

## வவுனியாவில் நேற்று முன்னெடுப்பு

**வவுனியா, மே 8**

**தமிழர் தாயக காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் நேற்றுடன் 3000 நாளை எட்டியுள்ள நிலையில் கவனவீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று நேற்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.**

இறுதிப்போரின்போதும், அதற்குமுன்னரும் காணாமற்போன தமது உறவுகளின் உண்மைநிலையினை வலியுறுத்தி தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் சுழற்சி முறை உணவுத்தவிர்ப்புப் போராட்டம் கடந்த 8 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. போராட்டம் ஆரம்பித்து மூவாயிரம் நாள்களைக் கடக்கின்ற நிலையில் அவர்களது போராட்டம் தீர்வின்றித் தொடர்கிறது. போராட்டத்தில் ஈடுபட்டவர் ஐரோப்பிய அமெரிக்கக் கொடிகளை ஏந்தியிருந்ததுடன், தங்களுக்கு சர்வதேச நீதிவேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தனர். (ச-110)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 8

தெல்லிப்பழை தென்மேற்கு அருள்மிகு பொற்கலம் தம்பை ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச்சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 19ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் சைவப்புலவர்கள் கந்த.சத்தியதாசன், ச.முகுந்தன், செ.த.குமரன், பொன்.சந்திரவேல் மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் ச.நவநீதன், க.கயிலைவாசன், த.மனோஜ்குமார் ஆகியோர்களின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ச-41)

## உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வெள்ளிவிழா அடுத்தமாதம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன.

உயர்பட்டப்படிப்புகள் பீடத்தில் முதுமாணி, முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப்பட்டங்களைப் பூர்த்தி செய்த பழைய மாணவர்கள் அனைவரையும் இந்த விழாவில் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளிவிழா தொடர்பான கலந்துரையாடல் பழைய மாணவர்கள் சங்கத்தினால் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

வெள்ளிவிழா நிகழ்வுகள் தொடர்பான ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் தொடர்புடையவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## 103 ஆவது கூட்டுறவாளர் தினம் பணியாளர்களுக்குப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 8

103 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை, பாடசாலை மாணவர்கள் மற்றும் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களுக்கு பல்வேறு போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

மாணவர்களுக்கு பேச்சு, கட்டுரை, சித்திரம், வினா விடைப் போட்டி என்பன நடத்தப்படும். சங்கப் பணியாளர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் கயிறு இழுத்தல், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் பேச்சு, கட்டுரை, வினாவிடைப்போட்டி போன்றன நடத்தப்படும். அதேவேளை கூட்டுறவு நிறுவனங்களில் 15 வருடங்களாக சேவை புரிந்த பணியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச-25, 17)



## புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், மே 8

ஏழாலை எனும் பெயர் உருவாகக் காரணமான ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (ச-41-66)





புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளிச் சிறார்களின் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச-41-66)

## எழுவைதீவுக் கடற்பரப்பில் கஞ்சாவுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், மே 8

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக பெருமளவான கஞ்சாவைக் கடத்திவந்த மூவரை கடற்படையினர் எழுவைதீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது 323 கிலோ 35 கிராம் கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டது. கடற்படையின் விசேட ரோந்துப் படகினால் படகினை சுற்றிவளைத்த பொழுது குருநகர் மற்றும் மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்த மூவருடன் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

தொடர்ந்து சந்தேகநபர்களை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-33-27-125)

## தேர்தல் வெற்றி; வெடிகொளுத்திக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், மே 8

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் சில இடங்களில் பட்டாசு கொளுத்தி நேற்றுமுன்தினம் மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

வட்டார ரீதியில் வெற்றிபெற்ற வேட்பாளர்களின் கட்சி ஆதரவாளர்கள் சில இடங்களில் இரவிரவாகப் பட்டாசுகளைக் கொளுத்தி ஆரவாரம் செய்தனர். (ச-33-17,131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வளர்ந்துவிட்டது நாட்டின் ஜனநாயகம்

### ரணில் கிண்டல்

கொழும்பு, மே 8


இலங்கையின் ஜனநாயகம் வளர்ச்சியடைந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நீங்கள் காண்பதுபோலவே மாறிவிட்டது. ஏனெனில் அண்மைய தேர்தல்களுடன் ஒப்பிடும்போது உள்ளாட்சித் தேர்தலில் மிகச் சிலரே வாக்களிக்க வந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு வீதம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வாக்களிக்க வந்துள்ள பெரும்பாலான வாக்காளர்கள் சில வேட்பாளர்களுக்கு நெருக்கமானவர்கள்போல் தெரிகிறது. இருப்பினும், இந்தத் தேர்தலில் எங்கள் கட்சியின் வேட்பாளர்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் - என்றார். (எ-இ)

# சுயேச்சைகளுடனேயே இணைவோம் எதிர்க்கட்சிகளுடன் ஆட்சியமைக்கோம்

### தேசிய மக்கள் சக்தி திட்டவட்டம்



கொழும்பு, மே 8

**மக்களால் நிராகரிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஒருபோதும் தயாரில்லை என்று தேசிய மக்கள் சக்தி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி முன்னிலை பெற்றிருந்தாலும் பெரும்பாலான சபைகளில் தனித்து ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலத்தைப் பெறவில்லை. இந்த நிலையில் சபைகளில் ஆட்சியமைப்பதற்கு எதிரணிகளின் ஆதரவு பெறப்படுமா? என எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது சபையில் அதிக இடங்களைப் பெற்ற கட்சிக்கே ஆட்சி அமைப்பதற்குரிய தார்மீக உரிமை உள்ளது. ஆனால் தோல்வி அடைந்த தரப்புகள் எல்லாம் இணைந்து ஆட்சி அமைப்பது பற்றி தற்போது கதைக்கப்படுகின்றது. சபையை நிர்வகிக்கவேண்டியது வென்றவர்களா? அல்லது தோற்றவர்களா? மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் அதைச் செய்யமுடியாது.

நாம் வென்ற இடங்களில் சபைகளை ஸ்தாபிப்போம். சுயாதீனமாக இறங்கியவர்கள் உள்ளனர். அவர்கள் விரும்பினால் எமக்கு ஆதரவு வழங்கலாம். ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி என்பன மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளாகும். நாட்டை நாமாக்கிய மேற்படி கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்க நாம் தயாரில்லை. சிறப்பான பாதீட்டை முன்வைத்தால் அதை எதிர்க்கவேண்டிய தேவை எழாது -என்றார். (எ-44)

# நம்மைநாமே ஆளவேண்டும் உணர்த்திய தமிழ்மக்கள்

### சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு



மன்னார், மே 8

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் சலுகைகளுக்கு விலை போகாது தன்மானத்துடன் உரிமைக்கும் தேசியத்துக்கும் முன்னுரிமை கொடுத்து நம்மை நாமே ஆள வேண்டும் என்ற ஒரே சிந்தனையில் தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர். அவர்களுக்கு எனது நன்றிகள் என வன்னி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளருமான இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் அதிகமான இடங்களை வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி பெற்றுள்ளது.

தேர்தலில் சலுகைகளுக்கு விலைபோகாது தன்மானத்துடன் உரிமைக்கும் தேசியத்துக்கு முன்னுரிமை கொடுத்து நம்மை நாமே ஆழவேண்டும் என்ற ஒரே சிந்தனையில் வாக்களித்து தமிழரசின் வெற்றியை தமிழர் தாயகம் எங்கும் நிலை நிறுத்தியுள்ளனர் எம் உறவுகள்.

வெற்றிபெற்ற வேட்பாளர்கள் உங்களுடைய கிராமங்களின் வளர்ச்சிக்காகவும் மாவட்டத்தைப் பாதுகாப்பதற்காகவும் குறிப்பாக தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்துவதற்காகவும் உங்களுடைய சமூக சேவைகளை மக்கள் நலன் சார்ந்து தொடர்ச்சியாக முன்னெடுக்கவேண்டும். அதுவே உங்களுடைய கடமை என்பதை நினைவிற் கொள்ளுங்கள் - என்றார். (ச-60)

## சுற்றிவளைப்பு: போதையுடன் 25 பேர் கைது

கொழும்பு, மே 8

நாடளாவிய ரீதியில் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருள்களுடன் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 8 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 12 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 2 பேரும், போதை மாத்திரைகளுடன் 3 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, 108 கிராம் 630 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும், 25 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 128 கிலோ கஞ்சா போதைப்பொருளும், 105 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## அமைச்சர் விஜேபால மனு தள்ளுபடி


கொழும்பு, மே 8

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த ரிட் மனுவை, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹிர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்த மனுவை இலங்கை பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளர் ரேணுகா பெரேரா தாக்கல் செய்திருந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## வாக்களிக்காத முன்னாள் ஜனாதிபதிகள்?

உள்ளூராட்சித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் வாக்களிக்கவில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளின் வருகைக்காக ஊடகவியலாளர்கள் காத்திருந்தபோது, மைத்திரிபால, கோத்தாபய மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் வாக்களிக்க வரவில்லை என்று அந்தந்த சாவடிகளில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்தோர் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## மத்துகமவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மே 8

மத்துகம, அதுல் முதலி மகாவித்தியாலயத்துக்குப் பின்புறமுள்ள வீதியில் துப்பாக்கிச்சூடுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிச்சூட்டில் யாருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 02 . 1948

மறைவு 06 . 05 . 2025

## திருமதி சுகிர்தம் மரியநாயகம்

நெல்லியடி கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தம் மரியநாயகம் அவர்கள் நேற்று முன்தினம் (06.05.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து-மனுவேற்பிள்ளைஇசபெல்லா தம்பதியின் ஏக புத்திரியும் இளவாலையைச் சேர்ந்த திருச்செல்வம்-திரேசம்மா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம் (ஓய்வு நிலை உத்தியோகத்தர், இலங்கை புகையிரத சேவை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற Dr.மங்களநாயகம் (சுவீடன்) மற்றும் மதுரநாயகம் (பிரான்ஸ்), தேவநாயகம் (அமெரிக்கா), மன்மதநாயகம் (மன்னண்ணா சமாதான நீதவான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லேனா-மங்களநாயகம் (சுவீடன்), ஞானமணி மதுரநாயகம் (பிரான்ஸ்), மேரிமகடலீன்மலர் தேவநாயகம் (அமெரிக்கா), டொறின் -மன்மதநாயகம் (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் வடமராட்சி வலயம்), காலஞ்சென்றவர்களான ஜேசுரட்ணம் மங்களநாதன் மற்றும் மதுரநாயகி (லண்டன்), அருட்பணி தேவராஜன், காலஞ்சென்ற அமிர்தராணி மற்றும் தர்மபாலன் (லண்டன்), தேவமனோகரன் ஆகியோரின் மைத்துனியும் ரணியா, நினா, மனோஜா எட்வின், மனோஜ்குமார், தனுஜா யூஜின், டிலக்சன், டிலோஜன், யூட் தவசெல்வன், மதிவதனி, யாழினி, ரூபன், நிலோஜினி, அமலாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தினோசன், தர்சனா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் அறுதி வழிபாடுகள் இன்று (08.05.2025) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் கரவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
**திரு.மன்மதநாயகம் (மன்னண்ணா)**
சகோதரன்-077 026 7711

# வர்த்தக நிலையமொன்று மின்னொழுக்கால் தீக்கிரை!

## அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 8

அச்சுவேலி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்று மின்னொழுக்குக் காரணமாக தீக்கிரைகாகியுள்ளது.

விற்பனை நிலையத்தை பூட்டுவதற்கு உரிமையாளர் முற்பட்டபோது, விற்பனை நிலையத்தின் பின்பகுதியில் ஏற்பட்ட மின்னொழுக்கு வேகமாக பரவியுள்ளது.

புகை வருவதை கண்ணுற்ற அயல் கடைக்காரர்களும், பொதுமக்களும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சம்பவ இடத்துக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்பு வாகனமும் விரைந்த நிலையில், நீண்ட முயற்சியின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-26)





ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஞானவைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ம-66)

# மரண அறிவித்தல்



மலர்வு 16 . 06 . 1983

உதிர்வு 05 . 05 . 2025

## பாலசுப்பிரமணியம் கிரிதாஸ் (கிரி)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும், தற்போது நீர்வேலியில் வசித்தவருமாகிய பாலசுப்பிரமணியம் கிரிதாஸ் அவர்கள் (05.05.2025) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - நித்தியகலா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா மற்றும் முத்தையா - அம்மாப்பிள்ளை தம்பதியரின் பேரனும், சங்கரி, தனுஜா ஆகியோரின் ஆசைக் கணவரும், அலிஷா, நித்தியா, அஜெய், அகிஷா, அயிஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜிதா, காலஞ்சென்ற ஜீர்த்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேஷ்கண்ணா அவர்களின் மைத்துனரும், ரோஹித், ஹனித்தா, மேகா ஆகியோரின் மாமனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நித்திலைட்ஸ்
குறுக்குறோட், நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
076 839 6935

(CS/58185) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 03 . 1951

மறைவு 06 . 05 . 2025

## சூசைப்பிள்ளை மேரிதிரேசம்மா (பொன்றோஸ்)

பழைய சந்தை வீதியை பிறப்பிடமாகவும், கனால் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மேரிதிரேசம்மா (பொன்றோஸ்) அவர்கள் நேற்றுமுன்தினம் (06.05.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - சவினம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை - செபமாலையம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், ஜோன் மேரி றமேஸ் இன் (கனடா) அன்புத் தாயாரும், மேரி கம்சனா (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், பெல்வின் (கனடா) அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற மரியதாஸ் (கிளி) மற்றும் நீற்றா, றாணி, மதுரம், சிறி, கொலின், சூரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்லம், செல்வம், ராக்கினி, லோகநாதன், ஜொய்சி, ஸ்ரெலா, காலஞ்சென்ற மரியநாயகி, மற்றும் புஸ்பராசா றஞ்சி, ரத்தினசிங்கம், விஞ்சன் காலஞ்சென்ற டேவிற் மற்றும் இன்பன், தேவகுமார், சூரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு இன்று (08.05.2025) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித தோமையார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனால் வீதி, மாதகல்.

தகவல்: குடும்பத்தினர்
077 829 9413

(CS/58179) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் – திருகோணமலை

## மூதூர் பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 2+1 |
| இலங்கை தமிழரசுக்கட்சி | 5+0 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | 0+2 |
| தேசிய காங்கிரஸ் | 0+1 |
| தேசிய மக்கள் காங்கிரஸ் | 0+3 |
| நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி | 1+0 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 3+1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2+0 |
| சுயேச்சைக்குழு | 0+1 |

## மொறவெவ பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 1+0 |
| இலங்கை தமிழரசுக்கட்சி | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 9+0 |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | 0+3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+3 |

## வெருகல் பிரதேச சபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 6+2 |
| தேசிய மக்கள் சக்தி | 1+2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1+1 |

## கந்தளாய் பிரதேச சபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| ஐக்கிய தேசிய கட்சி | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 10+0 |
| மக்கள் காங்கிரஸ் | 0+1 |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | 0+2 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2+4 |

## கோமரன் கடவெல பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| ஐக்கிய தேசிய கட்சி | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 9+0 |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | 0+3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1+2 |
| சர்வஜன அதிகாரம் | 0+1 |

## கிண்ணியா நகர சபை

| கட்சி | ஆசனம் |
|---|---|
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 1+0 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 4+0 |
| தேசிய மக்கள் சக்தி | 0+2 |
| மக்கள் கூட்டணி | 0+1 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1+2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2+2 |

## சேருவில பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 0+1 |
| இலங்கை தமிழரசுக்கட்சி | 1+0 |
| மக்கள் போராட்டக் கூட்டணி | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 7+0 |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | 0+1 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1+2 |
| சர்வஜன அதிகாரம் | 0+1 |

## திருகோணமலை மாநகரசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழரசுக்கட்சி | 9+0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 0+1 |
| ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு | 1+ 3 |
| தேசிய மக்கள் சக்தி | 3+3 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2+1 |
| சுயேச்சைக் குழு -2 | 0+1 |
| சுயேச்சைக் குழு -3 | 0+1 |

## பதவி ஸ்ரீபுர பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| மக்கள் போராட்ட கூட்டணி | 0+0 |
| தேசிய மக்கள் சக்தி | 9+0 |
| மக்கள் கூட்டணி | 0+2 |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | 1+1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+3 |
| சர்வஜன அதிகாரம் | 0+1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் – திருகோணமலை

## தம்பலகமுவ பிரதேச சபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 0+1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 1+1 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 2+0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 2+1 |
| மக்கள் கூட்டணி | 0+1 |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | 1+0 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2+1 |

## திருகோணமலை பட்டினமும் சூழலும்

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 0+1 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 6+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2+0 |
| சுயேச்சைக் குழு -1 | 0+1 |
| சுயேச்சைக் குழு -4 | 0+1 |
| சுயேச்சைக் குழு -5 | 0+1 |

## குச்சவெளி பிரதேசசபை

| கட்சி | ஆசனம் |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 2+2 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 4+0 |
| தேசிய மக்கள் சக்தி | 0+1 |

## கிண்ணியா பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 5+0 |
| தேசிய காங்கிரஸ் | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 0+2 |
| நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி | 0+1 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1+1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2+1 |

| கட்சி | ஆசனம் |
|---|---|
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 4+1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+2 |
| சுயேச்சைக் குழு | 0+1 |

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் – மட்டக்களப்பு

## ஏறாவூர் நகரசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 0+1 |
| ஐக்கிய தேசியக்கட்சி | 2+2 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 0+1 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 2+0 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 6+1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+1 |

## போர்தீவுப்பற்று பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 7+1 |
| தேசிய மக்கள் சக்தி | 0+3 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 3+2 |

## கோறளைப்பற்று வடக்கு பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 4+2 |
| தேசிய மக்கள் சக்தி | 0+3 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 5+2 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+1 |

## மண்முனைப்பற்று பிரதேசசபை

| கட்சி | ஆசனம் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 6+0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 0+1 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 3+1 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 0+1 |
| நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி | 0+1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+1 |
| சுயேச்சைக் குழு -2 | 1+0 |
| சுயேச்சைக் குழு -3 | 0+1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மண்முனை மேற்கு பிரதேச சபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் | 0+1 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 10+0 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 0+3 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 0+3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+1 |

### கோறளைப்பற்று பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 10+0 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 0+4 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 0+4 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 4+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+3 |

### ஏறாவூர் பற்று பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் | 0+1 |
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 13+0 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1+1 |
| ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 1+4 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 0+4 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+1 |
| சுயேச்சைக் குழு -1 | 1+0 |
| சுயேச்சைக் குழு -2 | 0+1 |
| சுயேச்சைக் குழு -3 | 0+1 |

### மண்முனை தென்மேற்கு பிரதேசசபை


| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 5+1 |
| தேசிய மக்கள் சக்தி | 0+1 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 3+3 |
| சுயேச்சைக் குழு | 2+1 |

### காத்தான்குடி நகரசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 0+3 |
| நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி | 0+2 |
| இலங்கை தொழிலாளர் கட்சி | 0+1 |
| சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 10+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+1 |
| சுயேச்சைக் குழு -1 | 0+1 |

### மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேசசபை

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 7+1 |
| ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | 0+1 |
| தேசிய மக்கள் சக்தி | 3+3 |
| தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி | 2+0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+1 |
| சுயேச்சைக் குழு-1 | 0+1 |
| சுயேச்சைக் குழு-2 | 0+1 |



### மட்டக்களப்பு நகராட்சி மன்றம்

| கட்சி | ஆசனம் + போனஸ் |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 16+0 |
| தேசிய மக்கள் சக்தி | 3+6 |
| தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி | 0+3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 0+2 |
| சுயேச்சைக் குழு | 1+3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் எல்லைக்குள் இந்தியா வான் தாக்குதல்!



புதுடில்லி, மே 8

**ஜம்மு காஷ்மீரில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பிரதேசத்தில் பயங்கரவாத அமைப்புக்களின் 9 முகாம்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.**

"ஒப்ரேசன் சிந்தூர்" என்ற பெயரில் இந்த வான்வழித் தாக்குதல் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, "ஜம்மு காஷ்மீர் பஹல்காமில் தாக்குதல் நடத்தப்பட்டு 15 நாள்களுக்குப் பின்னர் திட்டமிட்டு பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை மட்டும் வெகு நேர்த்தியாகக் இலக்கு வைத்து பொறுப்புடன் தாக்குதல் நடத்தியுள்ளோம். அங்குள்ள 9 முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையின் மூலம் பயங்கரவாதத்தின் மீது பதிலடி கொடுக்கும் நமது உரிமையை நாம் நிலைநாட்டியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.


இந்தத் தாக்குதலில் பயங்கரவாதிகள் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 56 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் இந்தியா தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்தியாவின் ஏவுகணைத் தாக்குதலில் 7 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவம் ஐந்து இந்திய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளது என்றும் சில இந்திய இராணுவத்தினர் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜம்மு காஷ்மீரில் உள்ள பஹல்காம் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தீவிரவாதக் குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது என்று இந்தியா குற்றஞ்சாட்டுகின்றது. இந்தச் சம்பவத்தின் பின்னர் இரு நாடுகளிடையே பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. தற்போது இந்தியா மேற்கொண்டுள்ள வான் வழித் தாக்குதல் இந்தப் பதற்ற நிலைமையை மேலும் அதிகரித்துள்ளது. (எ-இ)



## இந்தியா –பாகிஸ்தான் மோதல் அவமானம்!

### அமெ. ஜனாதிபதி தெரிவிப்பு

நியூயோர்க், மே 8

இந்தியா - பாகிஸ்தான் மோதல் ஓர் அவமானம் என்று தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்தப் போர் விரைவில் முடிவுக்கு வரும் என்று நம்புகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பிரதேசத்தில் இந்தியா நடத்திய தாக்குதல் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களை வைத்துப் பார்க்கும்போது ஏதோ ஒன்று நடக்கப்போகின்றது என்பதை மக்கள் அறிந்திருப்பார்கள். இந்தியா - பாகிஸ்தான் நீண்டகாலமாக மோதலில் ஈடுபட்டு வருகின்றன. இந்த மோதல் பல தசாப்தங்களாக நீடிக்கின்றது. இது விரைவில் முடிவுக்குவரும் என்று நம்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## இந்தியாவின் தாக்குதல் சீனா கவலை தெரிவிப்பு

பீஜிங், மே 8

பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மீதான இந்தியாவின் 'ஒப்ரேசன் சிந்தூர்' நடவடிக்கை கவலையளிக்கின்றது என்று சீனா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீனா வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு தரப்பும் இந்த நேரத்தில் அமைதி காக்கவேண்டியது அவசியம். இவை அண்டை நாடுகள். தற்போது அங்கு நிலவும் நிலை தொடர்பாக நாங்கள் கவலை கொண்டுள்ளோம்.

அனைத்து வகையான தீவிரவாதத்தையும் நாங்கள் எதிர்க்கிறோம். அமைதியாக இருக்கவும், நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், நிலைமையை மேலும் சிக்கலாக்கும் நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்க்கவும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## தகுந்த பதிலடி கொடுப்போம்

### பாகிஸ்தான் எச்சரிக்கை

கராச்சி, மே 8

இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலுக்கு பாகிஸ்தான் தான் விரும்பும் நேரத்திலும், இடத்திலும் தக்க பதிலடி கொடுக்கும் என்று பாகிஸ்தானின் இராணுவச் செய்தித் தொடர்பாளர் அகமது ஷரீப் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

கோழைத்தனமான எதிரியான இந்தியா, பஹ்வல்பூரின் அகமது கிழக்குப் பகுதியில் உள்ள சுபானுல்லா மசூதி, கோட்லி மற்றும் முசாபராபாத் ஆகிய மூன்று இடங்களில் வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்த கோழைத்தனமான மற்றும் வெட்கக்கேடான தாக்குதல் இந்தியாவின் வான்வெளியில் இருந்து நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் ஒருபோதும் பாகிஸ்தானின் எல்லைக்குள் வந்து ஊடுருவ அனுமதிக்கப்படவில்லை. நான் சந்தேகத்துக்கு இடமின்றிச் சொல்கிறேன். பாகிஸ்தான் தான் விரும்பும் நேரத்திலும், இடத்திலும் இந்தத் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கும். இந்தக் கொடூரமான ஆத்திரமூட்டும் நிகழ்வு பதிலளிக்கப்படாமல் விடப்படாது - என்றுள்ளது. (எ-இ)

**OPERATION SINDOOR**

## 'ஒப்ரேசன் சிந்தூர்' இந்தியா விளக்கம்

புதுடில்லி, மே 8

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதமுகாம்களை குறிவைத்து நடத்தப்பட்ட "ஒப்ரேசன் சிந்தூர்" தொடர்பாக அமெரிக்கா, சவூதி அரேபியா, ரஷ்யா உள்ளிட்ட 5 நாடுகளுக்கு இந்தியா விளக்கம் அளித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

[illegible] பயங்கரவாதிகளின் நம்பகமான தடயங்கள், நேரில் கண்ட சாட்சிகள் கூறியவை, பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாதக் குழுக்கள் தொடர்பான ஆதாரங்கள் ஆகியவை இந்தியாவிடம் இருக்கின்றன என்றும், அதன் அடிப்படையிலேயே இலக்குகள் தீர்மானிக்கப்பட்டன என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ/தரப் பெறுபேறு

**கோண்டாவில் இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு**

பி.கௌசிகா 3ஏ, ஆர்.பொபிசா ஏபிசி, கே.பபிசா பிசிஎஸ், கே. கபித்தன் பிசிஎஸ், கே.ஜசிந்தன் 2சி எஸ், சி.விஸ்னுகா பி 2எஸ், கே.டிலக்சன் 2சி எஸ், பி.சிலக்சனா 3எஸ்

**பொதுப்பிரிவு**

க. கவினயா 2சி எஸ்

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

செ.கார்த்திகா ஏ 2பி, இ.பிரணவி ஏபிசி

**கலைப்பிரிவு**

இ.விஷாணி 3ஏ, ச.மயூரி 2ஏ சி, தி.நிக்ஷனா 2ஏ சி (ச-25,131)

# மருந்துகள் பற்றாக்குறை; இருமடங்காகும் விலைகள்

**கொழும்பு, மே 8**

**நாட்டில் மருந்துப்பொருள்களின் பற்றாக்குறை தொடர்வதால், மருத்துவமனை இயக்குநர்கள் உள்ளூர் மருந்தகங்களிலிருந்து மருந்துகளை வாங்க வேண்டியுள்ளது. இதனால் அங்கு சில மருந்துகளின் விலைகள் வழக்கமான விலையைவிட பல மடங்கு அதிகரித்துள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் நிபுணர் மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் மருத்துவர்கள் சங்கத் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவா தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் பல வகையான மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பற்றாக்குறையாகவுள்ள மருந்துகளை மருந்தகங்களிலிருந்து வாங்குமாறு சுகாதார அமைச்சகம் மருத்துவமனை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சில மருந்துகள் உள்ளூர் மருந்தகங்களிலிருந்து வழக்கமான விலையைவிட அதிகரித்த விலையில் வாங்கப்படுகின்றன.

வழக்கமாக ரூ.57.10 விலையில் விற்கப்படும் செபுராக்ஸைம், இப்போது 575 ரூபாவுக்கு வாங்கப்படுகிறது. இது 1,000 வீத அதிகரிப்பாகும்.

அத்துடன், வழக்கமாக 191 ரூபா விலையில் விற்கப்படும் செப்டாசிடைம், தற்போது 1,512 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. இது 791 வீத அதிகரிப்பைக் குறிக்கிறது. சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப்பிரிவு, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகம் மற்றும் பிரதேச மருந்துக்கழகம் உள்ளிட்ட தொடர்புடைய நிறுவனங்களின் மோசமான செயற்பாட்டினால் மருந்துகளின் தொடர்ச்சியான பற்றாக்குறை ஏற்படுகிறது- என்றார். (ச-இ)

# தேர்தல் வன்முறை இளைஞனுக்கு விளக்கமறியல்

பொலநறுவை, மே 8

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிளைத் தீ வைத்து எரித்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலநறுவை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலநறுவையில் வசிக்கும் 35 வயதுடைய இளைஞனே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# ராஜபக்சக்களின் கோட்டை அநுரவின் வசமானது!

கொழும்பு, மே 8

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட ராஜபக்சக்களின் கோட்டையான மெதமுலன தேர்தல் தொகுதி 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வசமாகியுள்ளது.

வீரக்கெட்டியப் பிரதேசசபைக்குரிய மெதமுலனத் தேர்தல் தொகுதியில் 1115 வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 768 வாக்குகளைப் பெற்றது. அரசியலில் மெதமுலன அதிகாரத்தை



ராஜபக்களை வைத்திருந்தனர். எனினும், இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அந்த அதிகாரம் இல்லாமற் போயுள்ளது. (ச-இ)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 8

வேலணை மேற்கு பெரியபுலம் மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் வருடாந்த பொதுக் கூட்டம் ஆலய பரிபாலன சபைத் தலைவர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மஹோற்சவ உபயகாரர்கள் தமது பங்காளரின் சம்மதக் கடிதங்களை ஆலயத்தில் ஒப்படைத்து நிர்வாகசபை உறுப்பினராக தெரிவுசெய்யப் படவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## ஆளுங்கட்சிக்கு 30 சபைகளே

# கூட்டணி ஆட்சியமைக்க எதிர்க்கட்சிகள் பேச்சுகள்

கொழும்பு, மே 8

கொழும்பு மாநகரசபையில் புதிய நிர்வாகத்தை ஐக்கிய மக்கள் சக்தி மற்றக் கட்சிகளுடன் இணைந்து அமைக்கும், அதே நேரத்தில் புதிய மேயர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவராகவே இருப்பார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகசந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் 130 உள்ளூராட்சிமன்றங்களில் மாத்திரமே ஆட்சியமைக்கும் பெரும்பான்மையை ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ளது.

ஏனைய 209 சபைகளில் எதிர்க்கட்சிகளே அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளன. 255 உள்ளூராட்சிமன்றங்களில் தேசிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களைப் பெற்றுள்ள போதிலும் தனித்து ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையை பெற அக்கட்சி தவறியுள்ளது. அதேபோன்று 26 சபைகளில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் சம அளவிலான ஆசனங்களையே பெற்றுள்ளன.

14 உள்ளூராட்சிமன்றங்களில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சி 40 சபைகளில் ஆட்சியமைக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

அதேபோன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளும் சில சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளன. இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையைப் பெற்றுள்ள சபைகளில் கூட்டணி ஆட்சியமைக்கும் பேச்சுகள் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ச-இ)

## யாழ்ப்பாண மாநகரசபையின்

# ஆட்சி உரித்து தமிழரசுக்கட்சிக்கு

### அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணம் மாநகரசபையில் ஆட்சியமைக்கும் உரித்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியே கொண்டுள்ளது என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியே அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. யாழ்ப்பாண மாநகர சபையின் நகர பிதா பதவி எமக்கே உரித்தாக வேண்டும். ஏனைய கட்சிகள் அதற்கு இணங்கி அனுச



ரித்துச்செயற்படவேண்டும். யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதன்மை வேட்பாளர் இதுவரை எம்மால் தீர்மானிக்கப்படவில்லை. சாவகச்சேரி நகரசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸும் தலா ஆறு ஆசனங்களைப் பெற்றுள்ளன. ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பொறுத்து அங்கு ஆட்சியமையும் - என்றார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகலப்பில் ஈடுபட்டோருக்குப் பிணை

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை அடிப்படையாக வைத்து இடம் பெற்ற மோதலுடன் தொடர்புடைய இருவர் பிணையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

தேர்தலில் தோல்வியடைந்த தரப்பின் வீட்டுக்கு முன் பாக வெற்றியடைந்த தரப்பால் வெற்றிக் கொண்டாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன்;போதே கைகலப்பு ஏற்பட்டு, ஒருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதையடுத்தே சந் தேகநபர்களாக இருவர் கைது செய்யப்பட்ட நிலையில் இருவருக்கும் எதி ராக மல்லாமல் நீதி மன்றத்தில் வழக் குத் தொடரப்பட்டது. சந்தேகநபர்கள் இருவரும் பிணை யில் செல்ல அனும திக்கப்பட்டுள்ளனர்.

(ம-125)

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 29.02.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 27.05.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 28.05.2025 மற்றும் 29.05.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

www.peoplesbank.lk

PEOPLE'S BANK
Pride of the Nation

## அறை வாடகைக்கு உண்டு

யாழ் பல்கலைகழகத்திலிருந்து 250m தூரத்தில் இராமநாதன் வீதியில் கல்வி கற்கும் , வேலைக்கு செல்லும் பெண்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
077 208 7778

## பெயர்மாற்றம்

ஐந்தாம் வட்டாரம் மண்கும்பான் வேலணையில் வசிக்கும் உதயசூரியன் கிரிசாந் ஆகிய எனது பெயரை உதயசூரியன் இர்பான் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் உதயசூரியன் இர்பான் என்று கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தரு கின்றேன்.

**உதயசூரியன் இர்பான்**

## மரண அறிவித்தல்

பிறப்பு
04 - 04 - 1948



இறப்பு
07 - 05 - 2025

### ஞானேந்திரன் மன்மதராணி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேந்திரன் மன்மதராணி நேற்று 07.05.2025 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கரட்ணம் தம்பதியினரின் அன்பு மருமகளும் ஞானேந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும் குகதாஸ் (இலங்கை), மோகனதாஸ் (ஜெர்மனி), நிர்மலாராணி (சுவிஸ்), சிவதாசன் (சுவிஸ்), ஜெயராணி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வராணி, லதா, மீரா, தனபாலசிங்கம், மற்றும் மனோகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் எரன் (பிரான்ஸ்), அஜந்தினி ஆசிரியர் (பரியோவான் கல்லூரி), அனித்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுனித்தா, அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் மோஸஸ், ஏஞ்சல், அன்றியா, அபிகேல் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை 08.05.2025 வியாழக்கிழமை, காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பரி.யோவான் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**19 , கண்டி வீதி
அரியாலை
யாழ்ப்பாணம்**

**தகவல்:
குடும்பத்தினர்.
0773151317**

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 01 . 1926



மறைவு
07 . 05 . 2025

### செல்லத்துரை அன்னம்

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், 96 பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செல்லத்துரை அன்னம் அவர்கள் நேற்று (07.05.2025) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கதிராசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருணாசலம் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், செல்வரத்தினம், செல்வமலர் (லண்டன்), செல்வதேவி, செல்வறஞ்சன் (R.K Furniture), செல்வசெந்தி, செல்வகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பமலர், பாலசிங்கம் (லண்டன்), சண்முகதாஸன், பத்மினி, காலஞ்சென்ற சூரியகுமாரன் மற்றும் யசோதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வகபிலன், செல்வமகிபன், செல்வவினோதன் (பிரான்ஸ்), செல்வவாசன் (JV Lanka), செல்வநிலா (I.D.M), சிவாகரன் (லண்டன்), சிவகிருபன் (லண்டன்), சுபானி (லண்டன்), நிசாந்தன் (Yarl smart (pvt) ltd), நிவேஜன் (பிரான்ஸ்), நிகிந்தா (பிரான்ஸ்), நிசானுகா, பிரவின்குமார், தினேஸ்குமார், திபியா (Jaffna Hindu Ladie's college), கஜலக்ஷன் (skanda varodaya college) வேணுஜா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2025) வியாழக்கிழமை மு.ப 08.00 மணியளவில் அவரது தற்காலிக வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**No. 96 பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

*CS/58184) J-1

**தகவல்:
குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் மாநாடு ஆரம்பம்

கத்தோலிக்க திருச்சபையின் புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வதற்கான மாநாடு, இலங்கை நேரப்படி நேற்று இரவு ஆரம்பித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பாப்பரசர் பிரான்சிஸ் தனது 88 ஆவது வயதில் காலமானார். இதையடுத்தே புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வதற்காக, வத்திக்கானில் உள்ள 16ஆம் நூற்றாண்டை சேர்ந்த பாரம்பரியமிக்க சிஸ்டைன் தேவாலயத்தில் கார்தினால்கள் ஒன்றுகூடியுள்ளனர்.

புதிய பாப்பரசராக தெரிவு செய்யப்படுபவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் வரை பல்வேறு கட்ட வாக்கெடுப்பு நடைபெறும். ஒவ்வொரு கர்தினால் வாக்காளரும் தாம் விரும்பும் வேட்பாளரின் பெயரை வாக்குச் சீட்டுகளில் எழுதி தங்களது வாக்குகளை அளிப்பார்கள். மூன்று நாள்களுக்கு பின்னரும் ஒருவர் தெரிவு செய்யப்படவில்லை என்றால் வாக்காளர்களான கர்தினால்கள் சிந்திக்க நேரம் ஒதுக்குவதற்காக வாக்குப்பதிவு 24 மணிநேரம் நிறுத்தி வைக்கப்படும். 1831ஆம் ஆண்டு முதல் எந்தவொரு மாநாடும் நான்கு நாள்களுக்கு மேல் நீடித்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஒரு...

யின் தலைவர் அஜய் பங்கா இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவருக்கும் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதைத் தொடர்ந்தே, இந்த நிதியுதவி தொடர்பான அறிவிப்பு உலகவங்கியால் விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எரிசக்தி, விவசாயம், சுற்றுலா, பிராந்திய அபிவிருத்தி மற்றும் புதிய வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகிய துறைகளை மேம்படுத்த உலக வங்கி தீர்மானித்துள்ளது. இதன்படி, எதிர்வரும் மூன்றாண்டு செயற்றிட்டங்களைக் கருத்திற்கொண்டே இந்த நிதிவிடுவிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளில் உலக வங்கியின் தலைவர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதல்முறையாகும். உலக வங்கியின் இந்த அறிவிப்புக்கு ஜனாதிபதி அநுர தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். (அ-ம)

## அதிக...

கடந்த பொதுத்தேர்தலில் 61.56 சதவீத வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெற்றிருந்த நிலையில், உள்ளூராட்சித் தேர்தலில் 43.26 வீதமான வாக்குகளே கிடைக்கப்பெற்றுள்ளன. இதன்படி, தேசிய மக்கள் சக்தியின் வாக்குவங்கி 18.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

339 உள்ளூராட்சிசபைகளில் 265 சபைகளில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருந்தாலும் 126 வரையான சபைகளிலேயே தனித்து ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப்பெரும்பான்மை கிடைத்துள்ளது. ஏனைய சபைகளில் ஆட்சி அமைக்க இதர கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களின் ஆதரவு தேவைப்படுகின்றது. திசைகாட்டி சார்பில் 3 ஆயிரத்து 927 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் 339 சபைகளுக்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதன்முறையாக உள்ளூராட்சிசபைத் தேர்தலை எதிர்கொண்ட பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி 17 சபைகளில் வெற்றிபெற்றுள்ளது. கடந்த பொதுத்தேர்தலுடன் ஒப்பிடுகையில் அந்தக் கட்சிக்குரிய வாக்குவங்கி 4.03 வீதத்தால் அதிகரித்துள்ளது.

பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு 17.66 சதவீத வாக்குகள் கிடைக்கப்பெற்ற நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 21.69 சதவீத வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ஆயிரத்து 767 உறுப்பினர்கள் சபைகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வென்ற பொதுஜன பெரமுன கட்சி, இம்முறை எந்தவொரு சபையையும் கைப்பற்றவில்லை. எனினும், இந்தத் தேர்தலில் அந்தக் கட்சி 9 இலட்சத்து 54 ஆயிரத்து 517 வாக்குகளைப் பெற்றதால் அந்தக் கட்சியின் சார்பில் 247 உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செல்கின்றனர். கடந்த பொதுத்தேர்தலுடன் ஒப்பிடுகையில் பெரமுனவுக்குரிய வாங்குவங்கியும் அதிகரித்துள்ளது.

4.69 சதவீத வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு 381 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தற்போதைய தேர்தல் முறைமையின்கீழ் பெறக்கூடியதாக உள்ளது. 3.72 சதவீத வாக்குகளைப் பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி 300 உறுப்பினர்களையும், 2.83 சதவீத வாக்குகளைப் பெற்ற சர்வஜன அதிகாரம் 226 உறுப்பினர்களையும் பெற்றுள்ளது.

அதேவேளை வடக்கு, கிழக்குக்கு வெளியில் மலையகத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் மலையகக் கட்சிகள் மற்றும் மலையகக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்த பிரதான கட்சிகளே வென்றுள்ளன. (அ-ம-44)

## நிரந்தர...

கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கிலே அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கிறது. நாடு யாரிடமாவது இருக்கட்டும், தமிழர் தாயகம் தமிழரசோடு இருக்கவேண்டும் என்ற விடயத்தை நாங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்தோம். நாடாளுமன்றத் தேர்தலில் செய்த தவறை மீண்டும் செய்துவிடக்கூடாது என்று எமது மக்களை நாங்கள் கோரினோம். எங்களின் கோரிக்கைகளை மக்கள் செவிமெடுத்துள்ளனர். இந்த வெற்றி வெறுமனே தேர்தல் வெற்றியல்ல. இது தமிழர்களின் எதிர்காலத்துக்கான ஆணை. அந்த ஆணையின் பெறுமதியை நாங்கள் அறிவோம். அதற்கு அமையவே எங்களின் செயற்பாடுகள் அமையும். மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில், அதிலும் நாங்கள் அமோகமான வெற்றியைப் பெறுவோம் - என்றார். (அ-ம-இ)

## மின்னல்...

ளார். புதுக்குடியிருப்பு எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த அருமைநாயகம் யசோதரன் (வயது-43) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-19)

## ஈழத்...

என்று தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் பழநெடுமாறன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்நாட்டுப் போர் காரணமாக ஈழத் தமிழர்கள் இன்று எத்தனையோ நாடுகளில் பரந்து வாழ்கின்றனர். கனடா உள்ளிட்ட நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களுக்கு வெறும் மூன்று ஆண்டுகளில் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்தந்த நாடுகளின் குடிமக்களாக மிகவும் கௌரவமாக வாழ்கின்றனர்.

ஆனால், 1983ஆம் ஆண்டுமுதல் பல்லாயிரம் ஈழத்தமிழ் மீனவர்கள் அகதிகளாக தமிழக அகதி முகாம்களுக்குள் வாழ்கின்றனர். ஆனால், இன்றுவரை அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படவில்லை. அரச பணிகளிலும் புறக்கணிக்கப்படுகின்றனர். இது எவ்வாறு நியாயமாகும்? எனவே, ஈழத் தமிழர்களின் உரிமையை உறுதிப்படுத்த தமிழக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## எந்த...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் விடுதலை முன்னணியினர் ஜனநாயக கட்டமைப்புக்குள் நுழைவதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், ரணசிங்க பிரேமதாஸவும் அனுமதித்தனர். ஆனால், அவர்களின் தற்போதைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அவை மிகுந்த அச்சத்தை ஏற்படுத்துகின்றன. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் தக்கவைப்பதற்கும் எந்த எல்லைக்கும் செல்லக்கூடியவர்களாகத்தான் ஜே.வி.பி.யினர் காணப்படுகின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தலின் ஊடாக மக்கள் அரசாங்கத்தை தெளிவாக நிராகரித்துவிட்டனர். இது எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். கடந்த 5 மாதங்களாக, அரசாங்கத்தின் திட்டங்களால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். எதிர்காலத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவும்போது எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை நிரூபித்துக் காட்டுவோம்.

நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது. தேர்தல் விதிகள் மீறப்பட்டுள்ளன. நாட்டின் பிரதமர்கூட தேர்தல் சட்டங்களை மீறுமாறு மக்களுக்கு பகிரங்கமாக அறிவுறுத்தினார். நாட்டில் ஜனநாயகத் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. களுத்துறையில் எமது வேட்பாளர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது. அரசாங்கத்தின் வாக்குப் பலம் குறைந்துள்ளது. எனவே, அரசாங்கம் மீண்டும் ஆயுத பலத்தைத் தேர்ந்தெடுக்கப் போகின்றதா என்ற அச்சம் எமக்கு ஏற்படுகின்றது - என்றார். (அ-ம-44)

## மர்மக் காய்ச்சல்...

கொழும்பில் தனியார் துறையில் தனது மேற்படிப்பைத் தொடர்ந்து வந்த இளைஞர் அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டுக்கு வந்திருந்தார். நான்கு நாள்களாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த அவரின் உடல்நிலை மோசமான நிலையில், நேற்று மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். இதன்போது அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளனர். இறப்புக்கான காரணம் தொடர்பில் தெரியவராத நிலையில், உடலில் இருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. (அ-ம-26)

## மர அரிவு...

சிக்குண்டதில் படுகாயமடைந்து அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

## எட்டு...

டுள்ளனர். வைத்தியர் எஸ்.சுதாமதி, வைத்தியர் எஸ்.கனகசுந்தரம், வைத்தியர் வி.ஜெகதீஸ்வரன், வைத்தியர் எஸ்.உதயனன், வைத்தியர் எஸ்.தனரஞ்சன், வைத்தியர் ஆர்.அஜந்தன், திருமதி கலைச்செல்வி, வைத்தியர் எம்.துஷ்யந்தன் ஆகியோரே இவ்வாறு வைத்திய நிபுணர்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசிய சக்தியாக இணைய தமிழ்க் கட்சிகள் முன்வரவேண்டும்

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 8
தமிழர் தாயகத்தின் உள்ளூராட்சி சபைகளைத் தமிழ்த்தேசிய சக்தியாக ஒன்றிணைந்து ஆள அனைத்து தமிழ்த்தேசியக் கட்சிகளும் முன்வர வேண்டும் என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு நேற்றுப் புதன்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இந்த மண்ணில் எம் மக்கள் இருப்பை நிலைநிறுத்தும் செயற்றிட்டங்களோடு ஒன்றிணைந்த தமிழ்த் தேசிய சக்தியாக ஊரை ஆள முன்வரவேண்டும்.
மாற்றாரை வைத்தலை விடுத்து நாம் எம் மண்ணுக்காய் இதனைச் செய்து முடிப்போம் எனும் ஓர்மத்தோடு மக்கள் சேவகர்களாய்ப் பணியாற்ற வேண்டும்.
எம் சந்ததி எம் ஊரில் வாழச் சொற்களால் அல்ல செயல்களால் ஆட்சி செய்துகாட்ட அனைத்து தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஒன்றிணையவேண்டும்- என்றுள்ளது. (ச-66)



## சஜித்தின் அழைப்பை நிச்சயம் பரிசீலிப்போம்

### நாமல் தெரிவிப்பு

கொழும்பு, மே 8
உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பது தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விடுத்துள்ள அழைப்பைப் பரிசீலிப்போம் என்று பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஒருசில உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து ஆட்சியமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சிரேஷ்ட அரசியல் அனுபவத்துக்கு அமைய அழைப்பு விடுத்துள்ளார். இந்த விடயத்தை நாங்கள் விரிவாக பரிசீலிப்போம் - என்றார். (ம-இ)

பண்டிதர் கடம்பேசுவரனின்

## நினைவேந்தலும் நூல்கள் அறிமுகமும்

யாழ்ப்பாணம், மே 8
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனின் நினைவு நிகழ்வும் நூல்கள் அறிமுகமும் யாழ்.வட்டு இந்துக் கல்லூரியில் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளன.
வட மாகாண கல்விப் பணிப்பாளரும், சங்கத்தின் தலைவருமான க.பிரட்லி ஜெனாட் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக வட மாகாண முன்னாள் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். சிரேஸ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், நூல்களின் அறிமுகவுரையை நிகழ்த்துவார். சங்கத்தின் செயலாளர் பண்டிதர் சியாமினி தவபாலன் நிகழ்சியைத் தொகுத்து வழங்குவார். நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-25)

## விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மே 8
தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையினால் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கைநெறிகள் மாவட்ட அலுவலக கணினி நிலையத்தில் நடைபெறும்.
விண்ணப்பதாரி 16-25 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைசித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
க.பொ.த உயர்தரத்தில் 2 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டும்.
ஆர்வமுள்ளோர் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமை மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல 44,சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களுக்கு 021 2222383, 071 4553772 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கபட்டுள்ளது. (ச-25)

## பிரான்ஸ் ஏவுகணைகளால் இந்தியா தாக்குதல்

புதுடில்லி, மே 8
பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளின் நிலைகள் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலுக்கு பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளே பயன்படுத்தப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.
இந்தத் தாக்குதலில் இந்திய விமானப் படையினர் அதிநவீன ரபேல் போர் விமானங்களைப் பயன்படுத்தியுள்ளனர். இவை தொலைதூர இலக்குகளைத் துல்லிய மாகத் தாக்கக்கூடியவை.
இந்தத் தாக்குதலில் பிரான்ஸ் நாட்டின் தயாரிப்பான ஹேமல் எனப்படும் ஸ்மார்ட் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-இ)


## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 03 . 1945



உதிர்வு 04 . 05 . 2025

**திரு . சின்னத்துரை சண்முகலிங்கம்**
(முன்னாள் உபஅதிபர் யா /சங்குவேலி அ.த.க பாடசாலை, உரிமையாளர் - சண்யோகோப்பி & கூல்பார் - சுன்னாகம்)

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்கள் கடந்த (04.05.2025) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லில்லிமலர் தம்பதியினரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் பாசமிகு கணவரும், பிரசாந்த், துஷித்தா, ரஜீவ்சாந்த் ஆகியோரின் அன்புத்தந்தையும், சுமித்திரா, கோகுலன், சத்தியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திவ்யேஷ், ரிஷிகேஷ் ஆகியோரின் அன்பு அம்மப்பாவும், சுந்தரலிங்கம், சிவநேசலிங்கம், தேவசேனா, காலம் சென்ற இந்திரசேனா, மற்றும் விஜயசேனா, அமிர்தலிங்கம், பதுமசேனா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மண்டலநாயகி, பாமதி, காலஞ்சென்றவர்களான உருத்திராங்கதன், கனகநாயகம் மற்றும் சுந்தரலிங்கம், லோகேஸ்வரி, அருள்நேசன், யோகராஜா, மாலினிதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, சகலகலாதேவி, கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், விஜயலக்ஷ்மி, விசாகரட்ணம், ரமணி, சுதாகரன், மோகன் ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இரத்தினவாசம்
வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு இணுவில்

(CS/58181 J-1

தகவல்:
குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org